## SC. No. 51 /2018

P.W.5 - தயாளன்

தேதி: 13.03.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

வாலாஜாவில் சென்னை செல்லும் பேருந்து நிற்கும் பஸ் ஸ்டாண்டு ஒன்றும் பழைய பஸ் ஸ்டாண்டு ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். அதற்கு இடையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் பக்கத்தில் தான் உள்ளது. அன்றைக்கு வீட்டில் விசேஷம் நடந்ததால் கார் வந்து போய்க்கொண்டிருந்தது என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு கார் இல்லை. ஆறுமுகத்திற்கு சொந்தமான இடத்தில் தான் நான் கடை வைத்துள்ளேன். வாலாஜா மருத்துவமனைக்கு மாலை 5.30 மணிக்கு சென்றேன். பழைய பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில் தான் வாலாஜா காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து 1 கி மீட்டர் தூரத்தில் வாலாஜா அரசு மருத்துவமனை உள்ளது. பழைய பஸ் ஸ்டாண்டு அருகில் 4 ரோடு சந்திக்கிறது என்றால் சரிதான். லாவண்யாவை காரில் கூட்டிச்சென்றதாக நான் சாட்சி சொல்லவில்லை. கார் போனதை நான் பார்த்தேன். மணிகண்டன் சொன்னதன் பேரில் தான் நான் கேள்விப்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன். ஆறுமுகம் எனக்கு வேண்டியவர் என்பதால் முதல் விசாரணையில் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றும் நான் எதையும் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**SC. No. 51 /2018**

P.W.6 - பிரபு

தேதி: 13.03.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

வாலாஜாவில் சென்னை செல்லும் பேருந்து நிற்கும் பஸ் ஸ்டாண்டு ஒன்றும் பழைய பஸ் ஸ்டாண்டு ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். அதற்கு இடையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டர் தூரம் இருக்கும். 500 மீட்டர் தொலைவில் உள்ளது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பழைய பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில் தான் வாலாஜா காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். வாகனத்தின் பதிவு எண்ணை சம்பவ இடத்தில் பார்த்த பிறகு இப்போது தான் முன் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் வீடு அணைக்கட்டு ரோட்டில் மெயின் ஏரியாவில் உள்ளது. ஆறுமுகம் மகன் யார் என்று எனக்கு தெரியாது. விசாரித்தபோது யாரோ சொன்னதை வைத்து தான் முதல் விசாரணையில் ஆறுமுகத்தின் தம்பி என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். கார் பேனட் மீது ஏறி நின்றதாக நான் சொல்லியிருப்பது சென்னை பேருந்து நிலையத்திற்கு எதிரில் தான். முதல் விசாரணையில் சொன்னதுபோல நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மணிகண்டன் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைக்கு வீட்டில் விசேஷம் நடந்ததால் கார் வந்து போய்க்கொண்டிருந்தது என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு கார் இல்லை. ஆறுமுகத்திற்கு சொந்தமான

இடத்தில் தான் நான் கடை வைத்துள்ளேன். வாலாஜா மருத்துவமனைக்கு மாலை 5.30 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்திலிருந்து 1 கி மீட்டர் துாரத்தில் வாலாஜா அரசு மருத்துவமனை உள்ளது. பழைய பஸ் ஸ்டாண்டு அருகில் 4 ரோடு சந்திக்கிறது என்றால் சரிதான். லாவண்யாவை காரில் கூட்டிச்சென்றதாக நான் சாட்சி சொல்லவில்லை. கார் போனதை நான் பார்த்தேன். மணிகண்டன் சொன்னதன் பேரில் தான் நான் கேள்விப்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன். ஆறுமுகம் எனக்கு வேண்டியவர் என்பதால் முதல் விசாரணையில் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றும் நான் எதையும் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.